# நிழற்படங்கள்

- ரம்யா ஸ்ரீபெரும்புதூர்

அனேகமாக இந்தப் படம் தான் சரியாக இருக்கும் என்று நினைத்தான் சரவணன். ரொம்பச் சிரிக்கவில்லை அதே சமயம் சோகமாகவும் முகத்தை வைத்து கொள்ளவில்லை. சராசரியாக வாழ்ந்து வரும் வாழ்கையைப் பிரதிபலிக்கும் முகம். வாழ்ந்ததில் பெரிய வருத்தமில்லை, சாவிலும் பெரிய நிம்மதி இல்லை. இந்த உணர்வு தான் அவனுடைய மரணத்திற்குப் பிறகு செய்தித்தாளில் வரப்போகும் புகைப்படத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தான் சரவணன். மரணம் எப்பொழுது என்று தெரியாது. அதனால் என்ன? புகைப்படத்தை தயார் படுத்தி வைத்துக் கொள்வதில் என்ன தவறு? திருமணம் எப்பொழுது என்று தெரியாது. ஆனால் மதுரை அரசரடி சாரதி ஸ்டுடியோவில் நண்பர்கள் பலர் தலையைப் படிய வாரி, பவுடர் போட்டுக் கொண்டு படம் எடுத்துக் கொள்ளவில்லையா என்ன? திருமணம் ஒரு சிலருக்கு நடக்காமல் கூடப் போகலாம். ஆனால் மரணம் அப்படி இல்லையே! வாழ்வதற்கு செய்து கொண்ட தயார் நிலை கொஞ்சம் கூட போதவில்லை என்பது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையை பார்த்தால் புரிகிறது. சாவதற்காவது ஓரளவு தயார் செய்து கொள்ளலாமே?

சிங்கைக்கு வந்த பிறகு தான் சரவணனுக்கு மரண அறிவிப்புகள் வரும் பக்கங்களைப் பார்க்கும் ஆர்வம் ஏற்பட்டது. எதனால் என்று சரியாக

அவனுக்குச் சொல்ல தெரியவில்லை. லாரியின் பின்பக்கத்தில், தலைக்கு மேல்

கூரை இல்லாமல் வெயிலிலும், மழையிலும் உட்கார்ந்து கொண்டு, எல்லோரும் பார்க்கும்படி கும்பலோடு வேலைக்குச் செல்லும் பொழுது கொஞ்சம் செத்துப் போனான். வீட்டில் இருந்த கடைசி நகையை விற்று தான் படித்த பட்டப் படிப்பு சான்றிதழ் இங்கே கோவிலில் இலவசமாக கிடைக்கும் புளி சாதம் வாங்குவதற்கு வேண்டுமானால் உபயோகமாக இருக்கும் என்று புரிந்த பொழுது இன்னும் கொஞ்சம் செத்துப் போனான் . கும்பலோடு தூங்குவது, குளிக்க வரிசை, பண்டிகை என்றால் ஊருக்கு எப்படியாவது அதிகப் பணம் அனுப்புவது என்று வாழ்க்கை ஒடியது. ஒரு ஐந்து நிமிட தனிமை கூட நினைத்துப் பார்க்க முடியாத ஆடம்பரமானது. 'செத்தாலாவது நமக்குன்னு ஒரு தனி இடம் கிடைக்குமா?' என்ற கேள்வி அவ்வப் பொழுது எழுந்தது. உயிரோடு இருப்பவர்களுக்கு அவன் மேல் ஆர்வம் இல்லை. அவர்கள் கண்களில் அவன் தென்படுகிறானா என்பது கேள்விக் குறி. இதுவரை அவன் கண்களை நேருக்கு நேர் சந்தித்து பேசியவர்கள் அதிக பட்சம் இரண்டு பேராக இருக்கலாம். அவன் பெயர் கூட முழுதாக அங்கு பலருக்கு தெரியாது. அதனால் தானோ என்னவோ இங்கு நடக்கும் விஷயங்களில் ஆர்வமில்லாமல் போனாலும், இந்த வாரம் யார் செத்தார்கள் என்று பார்க்க ஆரம்பித்தான். ஒரு முறை பல பக்கங்களில் அஞ்சலிகள் வரும் அளவிற்கு ஒரு வயதான சீனப் பெரியவர் இறந்து போயிருந்தார். அப்பொழுது தான் அவர் யார் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் எல்லா அஞ்சலிகளையும் படித்து முடித்தான். பணக்கார தொழிலதிபர் போல் இருந்தது. பெரிய குடும்பம். ஒவ்வோரு மகனும், மகளும் பெரிய பெரிய பதவிகளில் இருந்ததால் அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்களின் உள்ளவர்கள் கூட வருத்தம் தெரிவித்திருந்தார்கள்.

அன்றிலிருந்து தான் இந்தப் பக்கங்களை படிக்கும் பழக்கம் தோற்றிக் கொண்டது. முக்கால்வாசி வயதானவர்கள் தான். வயது எண்பது என்று போட்டிருந்தாலும் சிலர் படத்தில்

இளமையாக இருப்பார்கள். "இந்த புகைப்படம் எடுக்கும் பொழுது அவர்கள் என்ன மனநிலையில் இருந்திருப்பார்கள்? வயது என்னவாக இருந்திருக்கும்?" என்று ஊகிக்க முயல்வான். சில வயதான பெண்கள் மிகையான அலங்காரம் செய்த முகத்தோடு காணப்படுவார்கள். ஒரு வேளை தன் உயிலில் இந்த படத்தைத் தான் உபயோகப் படுத்த வேண்டும் என்று எழுதி இருப்பார்களா? ச்செ! ச்செ! இருக்காது! சரவணனுக்கு ஒன்று என்னவோ கண்டிப்பாக தோன்றியது. யாருக்குமே இந்தப் படம் தான் பத்திரிகைக்குப் போகப் போகிறது என்று தெரிந்து இருக்காது. கவலைகள் இல்லாத தருணத்தில் தான் பொதுவாகப் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. யாருமே சோகத்தில் இருக்கும் பொழுது புகைப்படம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். கேமரா வெளியே வந்த உடனேயே மனநிலை என்னவாக இருந்தாலும் முகத்தில் புன்னகை வந்து விடத்தான் செய்கிறது. அந்தப் படத்தை காண்பிக்க பத்து பேர் இல்லாதவர்கள் கூட ஏதோ இந்த உலகம் முழுக்க தெரியப்போகும் முகம் போல் அதற்கு முக்கியவத்துவம் கொடுக்கிறார்கள்.

வயதானவர்கள் இறந்தால் பல சமயங்களில் ஏதோ வியாதி அல்லது வயோதிகம் என்று முடிவு செய்வான். சிறியவர்கள் என்றால் எதனால் என்று மனம் கேள்வி கேட்டுப் படுத்தும். பல சமயம் காரணம் இருக்காது. மனதை வாட்டும் நல்ல புகைப்படம் மட்டுமே இருக்கும். அதுவும் குழந்தைகள் படம் என்றால் 'கடவுளே கஷ்டப்படாமல் போயிருக்க வேண்டும்' என்று மனம் பதைபதைக்கும். யாருமே 'நல்ல வேளை! இவன் செத்தான்!' என்று சொல்லும்படி இருந்ததே இல்லை. கடுமையான முகத் தோற்றம் இருந்தால் கூட அது உயிர் இல்லாதவனின் முகம் என்று தெரியும் பொழுது மனம் இளகிவிடுகிறது.

ஒரு நாள் அடக்க முடியாமல் கூட வேலை செய்யும் மணியிடம் பேப்பரைக் காண்பித்து , "ச்சே! இந்த ஜோசப் எதனாலே செத்தான்னு போடல பார்த்தியா? அதப் போட வேணாமா? முக்கியமில்ல?" என்று சொல்லி விட்டான். ஏற்கனவே அவனோடு

பேசும் ஒரு சிலரில் மணியும் ஒருவன். அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு தள்ளி உட்கார்ந்து எதையோ முணுமுணுத்தான்.

இவனும் பதிலுக்கு முணுமுணுத்தான். "தினம் தண்ணி..கிட்ட வரமுடியாத சிகரெட்டு நாத்தம், கேலாங்குலே வாரகடைசியிலே இருவது வெள்ளிக்கு படுக்கும் பொம்பளை பத்தி நீ அசிங்கமா பேசி சந்தோஷப்படுறத எல்லாம் நாங்க கேட்கணும். மரணத்தப் பத்திப் பேசினா உங்களுக்கு வலிக்கிதோ?"

தான் இறந்தால் இரண்டு வரிகளாவது ஏதாவது பத்திரிக்கையில் வருமா என்று யோசித்தான். அவனுக்கு தெரிந்து செந்தோசா தீவில் ஒரு ஐந்து நட்சத்திர விடுதி கட்டிக் கொண்டிருந்த தளத்தில் தவறி விழுந்து மாண்ட நாச்சியப்பன் என்பவரின் பெயர் மற்று புகைப்படம் தான் பத்திரிக்கையில் இதுவரை அவன் பார்த்திருக்கிறான். 'நாச்சியப்பன் அதிர்ஷ்டசாலிப்பா. அவரு இறந்த உடனே அவரு முதலாளி குடும்பத்துக்கு இருபதாயிரம் வெள்ளி அனுப்பிடாராமில்ல' என்று சொன்ன சேகரைப் பார்த்து தான் சிரித்தது ஞாபகம் வந்தது. வழக்கம் போல் 'லூசுப்பய' முணுமுணுப்பு கேட்காமல் இல்லை.

மரண அறிவிப்பு புகைப்படத்தை பொறுத்த வரை உஷாராக செயல் பட வேண்டும் என்று முடிவு செய்தான் சரணவனன். 'யாருக்கும் அனுப்ப தோன்றாது. நாமே சிறிது பணம் சேர்த்து தான் இறந்த உடன் இந்தப் படத்தை பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள் என்று எழுதி வைத்தால் போயிற்று' என்று நினைத்துக் கொண்டான். உயிரொடு இருக்கும் பொழுது பத்திரிக்கையில் பெயர் வர வேண்டும் என்றால் எதையாவது சாதிக்க வேண்டும். ஆனால் இறந்த பிறகு ஒன்றுமே செய்ய வேண்டாம். உயிர் கண்டிப்பாக பிரிந்திருந்தால் போதும். ஒரு வசதி என்னவென்றால் எந்தப் பத்திரிக்கை ஆசிரியரும் 'இந்த ஆள் வாழ்க்கையிலே ஒன்றுமே சாதிக்கலை. இவர் படமெல்லாம் போட முடியாது' என்று மறுக்கப் போவதில்லை. அதனால் தான் சமீபத்தில் எடுக்கும் புகைப்படங்களில் தன் முகபாவனையை கவனமாக வைத்துக்

கொள்ள பழகிக் கொண்டான். பெண் பார்க்க அனுப்புவதற்குச் சில, அம்மா அப்பாவிற்காகச் சில, மரண அறிவிப்புப் பக்கங்களுக்குச் சில. இந்த பச்சை சட்டையை தேர்வு செய்ததற்குச் சரியான காரணம் இருந்தது. பள்ளி இறுதி தேர்வில் அவன் ஓரளவு நல்ல மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி அடைந்து விட்டான். அதை அவன் தந்தை எதிர்ப்பார்க்கவில்லை. அவர் குடும்பத்து வழக்கம் பல முறை தோல்வி அடைவது அல்லது திக்கித் திணறி தேர்ச்சி அடைவது. அந்த சந்தோஷத்தில் ஒரு நல்ல சட்டை வாங்கிக் கொடுத்து விட்டார். ஆனா வளரும் பையன் என்று கிட்டதட்ட தன்னுடைய அளவிற்கு எடுத்து விட்டார். 'என்னடா உங்கப்பா மூணு தலமுறைக்கு வைச்சு போடறா மாதிரி எடுத்திருக்காரு' என்று நண்பர்கள் கேலி செய்தனர். அதனால் இந்தச் சட்டை அவனை தெரிந்த சிலருக்கு கண்டிப்பாக ஞாபகம் இருக்கும். வயதான பிறகு இறந்தால் இளமையான படத்தை போடுவதா? என்ற கேள்வியும் எழுந்தது. அவனை நேசித்தவர்களுக்கு அவனின் இளமையான முகம் தான் தெரியும். இனிமேல் வாழ்க்கையில் பெரிய அங்கீகாரமோ அல்லது நிலைக்கும் உறவுகளோ தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு போய் விட்டது. இந்த பச்சை சட்டை படம் தான் சரியான படம் என்று முடிவு செய்தான் சரவணன்.

அவனுக்கும் திருமணம் ஆனது. எவ்வளவு சொல்லியும் கேளாமல், அவன் தாய் எல்லோரிடமும் "என் புள்ளைக்கு வெளி நாட்டுலே பெரிய உத்தியோகம். சைட் சூப்பர்வைசர். எவ்வளவு பெரிய கட்டடமெல்லாம் அங்கே கட்டிக்கிட்டு இருக்காங்க தெரியுமா?" என்று பேசியே ஒரு சுமாரான இடத்தில் அவனுக்கு பெண் பார்த்து விட்டாள்.

வெகுளிப் பெண் மீனா. "தமிழ் பேப்பர்லே வர சாவு விளம்பரமெல்லாம் பார்த்திருக்கியா?" என்று முதலிரவின் பொழுது சரவணன் கேட்கப் போக 'திரு திரு' வென்று விழித்து விட்டு கண் கலங்க ஆரம்பித்தாள். "இல்ல இல்ல சமீபத்திலே என் நண்பன்

ஒருத்தன் இறந்துட்டான்னு கேள்விப் பட்டேன். அதான் கேட்டேன்" என்று சமாளித்தான் சரவணன்.

'இன்னும் இரண்டு வருடமாவது உன்னை சிங்கைக்கு கூட்டி வருவதெல்லாம் சாத்தியம் இல்லை' என்று சொல்லி கிராமத்திலேயே விட்டு விட்டு வந்தாயிற்று. இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. நடுவே ஒரு முறை தான் போக முடிந்தது. வயதானவர்களுக்கு ஆக்கிப் போட்டுக் கொண்டு இவன் கடிததிற்கும், தொலைபேசி அழைப்பிற்கும் காத்துக் கொண்டிருப்பது தான் அவளுடைய வாழ்க்கை. கொஞ்சம் அதிக பணம் அனுப்ப வேண்டிய கட்டாயத்தினால் வேலைப் பளு கூடியது.

அதைத் தவிர இவன் அன்றாட வாழ்க்கையில் வேறு மாற்றங்கள் இல்லை.

"என்ன பணம் அனுப்பினேனே எல்லாம் வந்துச்சா?"

"எல்லாம் வந்ததுங்க. நீங்க எப்ப வரீங்க? அதை முதல சொல்லுங்க?"

"என்ன விளையடறியா?. இப்ப தானே வந்தேன். இன்னும் ரண்டு வருஷம் மூச்சு விட முடியாது."

"முழுவாம இருக்கேங்க."

"என்ன??"

"ஆமாங்க.. முழுவாம இருக்கேன்!"

"அப்படியா? சரி...நான் வர்ற வரைக்கும் அந்த பச்சை சட்டை போட்டுக்கிட்டு ரொம்பச் சிரிக்காம ஒரு மாதிரி முகத்த வச்சிக்கிட்டு இருக்கேனே, நீ கூட ஏங்க இப்படி லூசுப் பய மாதிரி இருக்கீங்க இந்தப் படத்துலே அப்படின்னு கேட்டியே, அந்த படத்தக் காட்டு, இது தான் அப்பான்னு."